**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.85-2023 **L.W.3** **P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | தனலெட்சமி | | |
| Father/Husband Name | சிவராமன் | | |
| Village | கோழீயூர் | | |
| Taluk | திட்டக்குடி | Age | 45 |
| District | கடலூர் | Time | 12.20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 10.06.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

***எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கோழீயூரில் வசித்து விவசாய வேலைசெய்துவருகிறேன். இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த அஞ்சலையை தெரியும். எனக்கு அசா.1, பட்டியல் சாட்சிகள் 2, 4 முதல் 11 வரையுள்ளவர்களை தெரியும். ராஜுவ்காந்தி என்பவரை தெரியும்அவர் டிரைவர் ஆவார் ( எதிரி ஆஜரில்லை) லாரி ஓட்டுனர். தேதி தெரியவில்லை, 2 வது மாதம், கடந்த 3, 4 வரூடத்திற்கு முன்பாக மதியம் 12.00 மணிக்கு இறந்த அஞ்சலை என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு அதாவது கோழீயூரில் பசுமாட்டை ஓட்டிச்சென்றார் அப்போது நானும், அஞ்சலையும் ரோட்டை கடக்கும்போது எதிரி ராஜுவ்காந்தி கவனக்குறைவாக திட்டக்குடியிலிருந்து விருத்தாசலத்திருக்கு சென்றவர் அஞ்சலை மீது மோதிவிட்டார் அதில் அஞ்சலைக்கு அதிக அடிப்பட்டுவிட்டது. வாகனத்தின் பதிவெண்ணை நான் கவணிக்கவில்லை விழுந்தவுடன் அந்த பாப்பாவைத்தான் நான் பார்த்தேன் பின்னர் எல்லோரும் ஓடிவந்தனர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு நானும், அங்கிருந்த பையன்கள் இன்னும் இரண்டு, மூன்று நபர்கள் அழைத்துச்சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசுமருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் போகும் வழியிலேயே அஞ்சலை இறந்துவிட்டார். போலிஸார் என்னை விசாரித்தனர்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் சம்பவ தேதி கடந்த 11–02–2023 ம் தேதி மதியம் 12.25 மணிக்குத்தான் ஊர்பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்ததாகவும், விபத்தில் இறந்த அஞ்சலை என்பவர் திட்டக்குடியிலிருந்து விருத்தாசலம் செல்லும் மெயின்ரோட்டில் கோழியூர் பேருந்து நிறுத்தம் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடது ஓரமாக பசுமாட்டை மேய்ச்சலுக்கு அழைத்துச்செல்லும்போது அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த TN-31-AL-3949 Ashok Leyland Tipper Lory யின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அஞ்சலை மீது மோதியதாக போலிஸார் விசாரணையில் சொல்லுயுள்ளேன் என்றால் ? சரிதான்.

2. மேற்ச்சொன்ன சம்பவத்தின் தொடர்ச்சியில் அஞ்சலையின் மீது லாரியின் முன்பக்க இடது டயரில் மாட்டி அடிப்பட்டு கிடந்தார் என்றும், உடன் நானும், அங்கு நின்றுக்கொண்டிருந்த ரஞ்சித்., மருதுபாண்டியின், மற்றும் அங்கிருந்தவர்கள் ஓடிச்சென்று பார்த்தோம் என போலிஸார் விசாரணையில் சொல்லுயுள்ளேன் என்றால் ? சரிதான்.

3. மேற்ச்சொன்ன இச்சங்கதிகள் அனைத்தும் ஞாபக மறதியின் காரணமாகத்தான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் ?சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்தில் இறந்த நபர் எனக்கு உறவினரா என்றால் ? பங்காளி முறை. விபத்தில் இறந்த அஞ்சலைக்கு என்ன வயது இருக்கும் என்றால் ? 30 அல்லது 33 இருக்கும். நான் படிக்கவில்லை, விபத்து நடந்த இடத்தின் அருகே வளைவு உள்ளது. விபத்தானது வளைவிற்கு கிழக்கால நடந்தது. வளைவிற்கு கிழக்கிலா அல்லது மேற்கிலா என்று போலிஸார் விசாரணையில் நான்சொன்னேனா என்றால ? சொன்னேன். நான் சொன்ன விபரத்தை போலிஸார் எழுதிக்கொண்டார்கள். நான் சொல்ல சொல்ல போலிஸார் மருத்துவமனைக்கு வந்து கையால் எழுதிக்கொண்டார்கள். விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் ராஜுவ்காந்திதான் என அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பேசிக்கொண்டதின் பேரில் எனக்கு தெரியும். அக்கம் பக்கத்தில்பேசிக்கொண்டவர்களின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் ? அவர்கள் பெயர் எனக்கு தெரியாது அவ்வளவு பழக்கமில்லை.

2. நான் விபத்தை எந்த திசையில இருந்து பார்த்தேன் என்றால் ? நானும், விபத்தில் இறந்த நபரும் ஒன்றாக வந்துகொண்டிருந்தோம். விபத்து நடந்த இடத்திற்கு போலிஸார் வந்தார்களா என்றால் ? விபத்து நடந்த உடனே காயம் பட்டவரை மருத்துவமனைக்கும்அழைத்துச்சென்றோம். நான் அங்கிருந்தவரைபோலிஸார் அங்கு வரவில்லை. நான் விபத்து நடந்த சமையத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் பொய்சியம்அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. லாரியின் ஆரண் சத்தத்தைகேட்டு மாடு மிரண்டு விபத்தில் இறந்து நபரை இழுத்துக்கொண்டு சென்றதால்தான் இவ்விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் போலிஸார் விசாரணையில் வேறு வாக்குமூலம் அளித்துவிட்டு அதற்குமுரணாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.85-2023 **L.W.1** **P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | விஷ்வநாதன் | | |
| Father/Husband Name | நடராஜன் | | |
| Village | கோழீயூர் | | |
| Taluk | திட்டக்குடி | Age | 75 |
| District | கடலூர் | Time | 12.00 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 10.06.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

***எதிரி ஆஜரில்லை, BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கோழீயூரில் வசித்து விவசாய வேலைசெய்துவருகிறேன். இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த அஞ்சலை என்மருமகள் ஆவார். எனக்கு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 11 வரையுள்ளவர்களை தெரியும். அவர்தான் என் மருமகள் மீது லாரியை விட்டவர்தான் எதிரி ராஜுவ்காந்தி ( எதிரி ஆஜரில்லை) கடந்த 02–11–2023 ம் வருடம் மதியம் 12.45 மணிக்கு மேற்கிலிருந்து கிழக்கே போன லாரி என் மருமகள் மாடு ஓட்டிக்கொண்டு இடது புறத்திலிருந்து வலது புறம்சென்றபோது லாரி கவனக்குறைவால் என் மருமகள் மீது மோதியது. நான் வீட்டில்படுத்திருந்தேன் சேதியை அறிந்து ஓடிப்போனேன். அங்கு வந்துகொண்டிருந்த ஒரு போக்குவண்டியில் என் மருமகளை முதலில் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டுச்சென்றோம் அங்கு அவர்கள் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு அவர்கள் திருச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல சொன்னர்கள் நாங்களும் சென்றோம். போன வழியிலேயே என் மருமகள் இறந்துவிட்டார். லாரியின் பதிவெண் எனக்கு ஞாபகமில்லை. பார்க்க முடியவில்லை ஆனால் வயிற்றில் அடிப்பட்டது. பின்னர் திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் என்மரும–களை பிரேத பரிசோதனைசெய்துவிட்டு உடலை எங்களிடம் ஒப்புவித்தனர். நான் என் மருமகளை அடக்கம் செய்துவிட்ட போலிஸ்ஸேஷனுக்கு வந்து ரிப்போர்ட் கொடுத்தேன். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையததுான் கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் **அசா.ஆ.1** ஆகும்.

போலிஸார் என்னை விசாரித்தனர்.

**வழக்கின் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண், விபத்து நடந்தஇடத்திற்கு தன்னுடைய பேரனுடன் வந்து மருமகளை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றது பற்றியும் புகாரிலும், போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு சாட்சி மறைத்து சாட்சியம் அளித்ததால் கற்றிந்த அரசு வழக்கறிஞர் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கோரிக்கை வைத்தார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.** நான்கொடுத்த புகாரில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் TN-31-AL-3949 Ashok Leyland Tipper Lory என்று எழுதியிருக்கும் என்று புகார் வாக்குமூலத்திலும், போலிஸார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**2.** நான் கொடுத்த புகாரிலும், போலிஸார் விசாரணையிலும் என் மருமகள் அஞ்சலை விபத்துஏற்பட்டு இறந்தது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு என் ஊரைச்சேர்ந்த பிரசாந்த் த–பெ.சேதுராமன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**3.** மேற்ச்சொன்ன சங்கதிகளை ஞாபகமறதியின் காரணமாகத்தான் மறைத்து சாட்சியம் சொன்னேன் என்று சொன்னால் **?** சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** விபத்து நடந்தது சம்மந்தமாக போலிஸார் நான் புகார் கொடுத்தேனா, போலிஸாரே புகாரை எழுதினார்களா என்றால் **?** நான்தான் நேரில் சென்று புகார் அளித்தேன். புகாரை யார் எழுதியது என்றால் **?**என்னுடைய பேரண் எழுதினார். நான் ஆறாம் வகுப்புவரை படித்துள்ளேன். போலிஸார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிஸார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் **?** 2, 3 முறை விசாரித்தார்கள். போலிஸார் நான்சொல்ல சொல்ல கையால் எழுதிக்கொண்டார்களா அல்லது தட்டச்சு செய்தார்களா என்றால் **?** எனக்கு அந்த விபரம் தெரியாது. நான் கொடுத்த புகாரை பதிந்துகொண்டு அதற்கு மறு பயணாக ரசீதுகொடுத்தார்களா என்றால் **?** இல்லை. புகாரை எழுதிய எனது பேரண் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் **?** படித்து காண்பித்தார். விபத்திற்கு பிறகு விபத்து நடந்தஇடத்திற்குநான் சென்று பார்த்தேனா என்றால் **?** பார்த்தேன். விபத்து நடந்தஇடத்திற்கு போலிஸார் வந்தார்களா என்றால் **?** விபத்து நடந்த பிறகு மருத்துவ மனைக்கு சென்றுவிட்டேன். ஆனால் போலிஸார் வந்தார்களா என்று எனக்கு தெரியாது.

**2.** என் மருமகள் இறந்த விபரத்தை யார் எனக்கு சொன்னது என்றால் **?** என்பேரண், என் பேத்தி ஆகியோர்கள் சொன்னார்கள். பிரசாந்த், அகிலா, தனலெட்சுமி ஆகியோர்கள் சொன்னார்கள். விபத்து நடந்த உடனே மேல் சிகிச்சைக்குஅழைத்துச்செல்லும் முன்பே புகார் அளித்தேனா என்றால் **?** என்மருமகள் இறந்தபிறகே புகார் அளித்தேன். லாரியின் ஆரண் சத்தத்தைகேட்டு மாடு மிரண்டு விபத்தில் இறந்து நபரை இழுத்துக்கொண்டு சென்றதால்தான் இவ்விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் போலிஸார் விசாரணையில் வேறு

வாக்குமூலம் அளித்துவிட்டு அதற்குமுரணாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் **?** சரியல்ல**.** இறந்த நபர் எனது மருமகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் **?**சரியல்ல**.**

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI